செ.வெ.எண்.364/2009/செமதொஅ நாள்: 29.10.2009

**<u>சென்னை அருகே பள்ளிக்கரணையில் ரூ.19.00 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தினை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.</u>**

காஞ்சிபுரம் மாவட்டம், பள்ளிக்கரணையில் ரூ.19.00 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள 642.40 மீட்டர் நீளமுள்ள ஆறுவழிப்பாதை கொண்ட மேம்பாலத்தினை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்துவைத்தார். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் வெள்ளக்கோயில் மு.சாமிநாதன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன், நெடுஞ்சாலைத்துறை செயலர் திரு.கோ.சந்தானம் இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஆர்.இராஜா, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.நம்பிராஜன், தலைமை பொறியாளர் திரு.மணிராஜ், கண்காணிப்பு பொறியாளர் திரு.பன்னீர்செல்வம், கோட்ட பொறியாளர் திரு.மனோகரன், மரபுசாரா எரிசக்தி ஆலோசனைக்குழு உறுப்பினர் திரு.த.விஸ்வநாதன், புனித தோமையர்மலை ஒன்றியக் குழுத்தலைவர் திரு.க.ஏழுமலை, ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் புதிய மேம்பாலத்தை திறந்து வைத்து செய்தியாளர்களிடம் பேசியதாவது, இந்த மேம்பாலம் கட்டுவதற்கு 21.02 கோடி மதிப்பீட்டில் கட்ட ஒப்புதல் பெறப்பட்டு, 21 மாதங்களில் ரூ.19.00 கோடியில் கட்டி முடிக்கப்பட்டு இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதனால் ரூ.2 கோடி ரூபாய் மிச்சப்படுத்தப்பட்டுள்ளது. இந்த பாலம் ஆறுவழிப்பாதையாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளதால் பாலத்தின் மேற்பகுதியில் வேளச்சேரியிலிருந்து - தாம்பரம் மற்றும் தாம்பரத்திலிருந்து – வேளச்சேரி செல்லக்கூடிய வாகனங்களும், கீழ்ப்பகுதியில் பல்லாவரம்-துரைப்பாக்கம் சாலையிலிருந்து வேளச்சேரி மற்றும் தாம்பரத்திற்கு செல்லக்கூடிய வாகனங்களும், வேளச்சேரி மற்றும் தாம்பரத்திலிருந்து பல்லாவரம்-துரைப்பாக்கம் செல்லக் கூடிய வாகனங்களும் அனுமதிக்கப்படும். இதனால் ஏற்கனவே இருந்து வந்த போக்குவரத்து நெரிசலிலிருந்து விடுபட பொதுமக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என தெரிவித்தார்.

வெளியிடுபவர்

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.